**சுருக்கம்**

வேளாண்மை உழவர் நலத்துறை – 2022-2023 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள்– மாநில அளவில், உள்ளூர் புதுமையான வேளாண் தொழில்நுட்பம் மற்றும் உள்ளூர் விவசாய இயந்திரங்களின் கண்டுபிடிப்புகள், வேளாண் ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிகள் மற்றும் இயற்கை முறையில் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அங்கீகாரம் அளிக்கும் விதமாக மாநில அளவிலான விருதுகள் - ரூ.6.00 லட்சத்திற்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு- ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.4) துறை**

**அரசாணை (நிலை) எண். 191** **நாள் : 24.08.2022**

திருவள்ளுவர் ஆண்டு, 2053
சுபகிருது, ஆவணி 08-ஆம் நாள்

படிக்க:

1. அரசு ஆணை (நிலை) எண். 7, வேளாண்மை உழவர் நலத்(வேஉ4) துறை, நாள்.10.01.2022.
2. வேளாண்மை இயக்குநர் கடித எண்.வேதபி3/தகவல்/83328/2020, நாள் 08.05.2022 மற்றும் 25.05.2022.
3. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்த் துறை கடித எண்.9793/2022, நாள் 12.05.2022 மற்றும் 30.06.2022.
4. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண்மை மற்றும் விவசாய வாரியம் கடித எண்.இ3/1914/2022, நாள் 18.04.2022, 06.05.2022 மற்றும் 08.06.2022.

*****

**ஆணை :**

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 2022-2023 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிவிப்பில் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்:-

> **"வேளாண்மையில் சிறப்பாகச் செயலாற்றும் விவசாயிகளுக்குப் பரிசு"**
> "இயற்கை வேளாண்மை, விளைபொருள் ஏற்றுமதி, புதிய உள்ளூர் கண்டுபிடிப்புகளில் சிறந்து விளங்கும் விவசாயிகளை இந்த அரசு தொடர்ந்து ஊக்குவித்து, பரிசு அளிக்கும், பாராட்டி மகிழும்."

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2021-2022 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் அறிவிப்பிற்கிணங்க, வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் ரூ.6.00 இலட்சத்திற்கு நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்தும், பரிசு பெறும் விவசாயிகளை தேர்வு செய்ய மாவட்ட, மாநில அளவில் குழு அமைத்தும், உரிய வழிகாட்டு நெறிமுறைகளுடன் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட வேளாண்மை இயக்குநர் தமது கருத்துருவில், விருது பெறுபவர்களை தேர்ந்தெடுப்பதற்காக, மாவட்ட அளவிலான குழு மற்றும் மாநில அளவிலான குழுவை அமைத்திட, உறுப்பினர்களை பரிந்துரை செய்தும், தேர்வு செய்யப்படும் இரண்டு விவசாயிகளுக்கு (தலா ரூ. 1.00 இலட்சம் வீதம்) பரிசினை வழங்க ஏதுவாக ரூ.2.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்தும் ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார். பரிசு வழங்க தேர்வு செய்யப்படும் இனம்/பரிசுத்தொகை விவரம் கீழ்வருமாறு வேளாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்:-

I. புதிய உள்ளூர் வேளாண் தொழில்நுட்பங்கள் கண்டுபிடிப்பிற்காக ரூ.1லட்சம் மற்றும்
II. வேளாண் சாதனங்களின் கண்டுபிடிப்பிற்காக ரூ.1லட்சம்

4. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர், தமது கருத்துருவில், சிறப்பாக செயல்படும் இயற்கை விவசாயிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக, மாவட்ட அளவிலான குழு மற்றும் மாநில அளவிலான குழுவை அமைக்க உறுப்பினர்களை பரிந்துரை செய்தும், மேலும், இயற்கை முறையில் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் மூன்று விவசாயிகளைத் தேர்வு செய்து ரூ.2.00 இலட்சத்திற்கு பரிசு வழங்க ஏதுவாக (முதல் பரிசாக ரூ.1 லட்சமும், 2வது பரிசாக-ரூ.60,000/- மற்றும் 3 வது பரிசாக- ரூ.40,000/-) நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

5. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம், அவர்களின் கருத்துருவில் விவசாய ஏற்றுமதியில் சிறப்பாகச் செயல்படும் விவசாயிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக மாவட்ட குழுவால் பரிந்துரை செய்யப்படும் விண்ணப்பங்கள், மாநில அளவில் அமைக்கப்பட்ட குழுவால் பரிசீலிக்க ஏதுவாக, உறுப்பினர்களை பரிந்துரை செய்தும், விவசாய ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிக்கு பரிசினை வழங்க ரூ.2.00 இலட்சத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்

6. மேற்காணும் வேளாண்மை இயக்குநர், இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மற்றும் தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் ஆகிய துறைத்தலைவர்களின் கருத்துரு அரசால் பரிசீலனை செய்யப்பட்டது. பரிசீலனைக்குப்பின், மாவட்ட அளவிலான

குழு மற்றும் மாநில அளவிலான குழுக்கள் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு அமைத்து அரசு ஆணையிடுகிறது.

1. மாவட்ட அளவிலான குழு:-

உள்ளூர் புதுமையான வேளாண் தொழில்நுட்பம் / உள்ளூர் விவசாய இயந்திரங்கள் கண்டுபிடிப்பு, இயற்கை முறையில் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மாநில அளவிலான விருது/ ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிகளை தேர்ந்தெடுப்பதற்கான மாவட்ட அளவிலான பின்வரும் உறுப்பினர்களைக் ஒருங்கிணைத்த குழு:

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் | தலைவர் |
| 2 | மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் | உறுப்பினர் |
| 3 | வேளாண்மை துணை இயக்குநர் (மஅதி/உ.ப.நி) / திட்டம் | உறுப்பினர் |
| 4 | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானி | உறுப்பினர் |
| 5 | செயற்பொறியாளர் (வேளாண்மை பொறியியல் துறை) | உறுப்பினர் |
| 6 | தோட்டக்கலை துணை இயக்குநர் சம்பந்தப்பட்ட மாவட்டம் | உறுப்பினர் |
| 7 | வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) | உறுப்பினர் |
| 8 | 3 முன்னோடி விவசாயிகள் (வேளாண் இணை இயக்குநர்கள் தேர்வு செய்து மாவட்ட ஆட்சியர்களால் அங்கீகரிக்கப்பட்ட விவசாயிகள்) | உறுப்பினர் |

2. மாநில அளவிலான குழுக்கள்:

அ) புதிய உள்ளூர் விவசாய தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்களின் கண்டுபிடிப்பு

| | | |
|---|---|---|
| 1 | வேளாண்மை இயக்குநர் | தலைவர் |
| 2 | தலைமைப் பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, | உறுப்பினர் |
| 3 | கூடுதல் வேளாண்மை இயக்குநர் (மஅதி) | உறுப்பினர் |
| 4 | தோட்டக்கலை துறை கூடுதல் இயக்குநர் | உறுப்பினர் |
| 5 | கூடுதல் வேளாண்மை இயக்குநர் (வேளாண் வணிகம்) | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 6 | வேளாண்மை இணை இயக்குநர் (மாதி) | உறுப்பினர் |
| 7 | துணை வேளாண்மை இயக்குநர் (தகவல் தொழில் நுட்பம் மற்றும் பயிற்சி) | உறுப்பினர் |
| 8 | ஒரு விவசாய பிரதிநிதி | உறுப்பினர் |

ஆ) இயற்கை விவசாயம்:

| | | |
|---|---|---|
| 1. | இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை | தலைவர் |
| 2. | கூடுதல் வேளாண்மை இயக்குநர் (மத்திய மற்றும் மாநில திட்டம்) வேளாண்மை இயக்குநரகம் | உறுப்பினர் |
| 3. | இணை இயக்குநர் தோட்டக்கலை (திட்டம்) தோட்டக்கலை இயக்குநரகம் | உறுப்பினர் |
| 4. | வேளாண்மை இணை இயக்குநர் (மாநில திட்டம்) | உறுப்பினர் |
| 5. | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக விஞ்ஞானி | உறுப்பினர் |
| 6. | இயற்கை விவசாயத்தில் சிறந்து விளங்கும் அரசு சார்பற்ற நிறுவனத் தலைவர் | உறுப்பினர் |

இ) வேளாண் எற்றுமதி.

| | | |
|---|---|---|
| 1. | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் | தலைவர் |
| 2. | வேளாண்மை இயக்குநர் | உறுப்பினர் |
| 3. | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, இயக்குநர் | உறுப்பினர் |
| 4. | வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA) பிரதிநிதி | உறுப்பினர் |
| 5. | வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகத்தின் பிரதிநிதி(DGFT) | உறுப்பினர் |
| 6. | தென்னை வளர்ச்சி வாரியத்தின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 7. | நறுமணப் பொருட்கள் வாரியத்தின் பிரதிநிதி | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 8. | காபி வாரியத்தின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 9. | தேயிலை வாரியத்தின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 10. | இந்திய முந்திரி எற்றுமதி ஊக்குவிப்பு கவுன்சிலின் பிரதிநிதி. | உறுப்பினர் |
| 11. | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பிரதிநிதி | உறுப்பினர் |
| 12. | உதவிச் செயலர், தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம். | உறுப்பினர் மற்றும் செயலர் |

6. மேலும், வேளாண்மை இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் ஆகிய துறைத் தலைவர்களின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனைக்குப்பின் வேளாண்மையில் சிறந்து விளங்கும் விவசாயிகளின் சிறந்த செயல்பாட்டினை அங்கீகரித்து, தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு விருது வழங்க ஏதுவாக ரூ.6,00,000/- (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்) நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது. நிதி ஒப்பளிப்பு செய்யப்படும பரிசு இனம்/தொகை/துறை குறித்த விவரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு:-

| வ. எண் | இனம் | பரிசு தொகை (ரூ.இலட்சத்தில்) | சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் |
|---|---|---|---|
| 1. | (i) புதிய உள்ளூர் வேளாண் தொழில் நுட்பங்கள்/ கண்டுபிடிப்புகள்<br>(ii) வேளாண் சாதனங்களின் கண்டுபிடிப்புகள் | 1.00<br>1.00 | இயக்குநர் வேளாண்மைத் துறை |
| 2. | இயற்கை விவசாயத்தில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு<br>முதல் பரிசு<br>இரண்டாம் பரிசு<br>மூன்றாம் பரிசு | <br>1.00<br>0.60<br>0.40 | இயக்குநர் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை |
| 3. | வேளாண் ஏற்றுமதியில் சிறந்த விளங்கும் விவசாயிக்கு | 2.00 | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் |
| | மொத்தம் | 6.00 | |

7. மேலே பத்தி-6இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

I 2401-00 பயிர் வளர்ப்பு - 001 நெறிபடுத்தலும் நிருவாகமும் - மாநிலச் செலவினங்கள் - AA வேளாண்மைத்துறை தலைமையிடப் பணியாளர்கள் - 359 பரிசுகளும் வெகுமதிகளும் - 01 பரிசுகளும் வெகுமதிகளும்.
[IFHRMS த.தொ.கு: 2401 – 00- 001- AA- 35901] - ரூ. 2.00 லட்சம்

II 2401 - 00 பயிர் வளர்ப்பு - 001 நெறிபடுத்தலும் நிருவாகமும் - மாநிலச் செலவினங்கள்-AO தோட்டக்கலை இயக்ககம் - 359 பரிசுகளும் வெகுமதிகளும் – 01 பரிசுகளும் வெகுமதிகளும்.
[IFHRMS த.தொ.கு: 2401 – 00- 001- AO- 35901] - ரூ. 2.00 லட்சம்.

III 2401 - 00 பயிர் வளர்ப்பு - 001 நெறிபடுத்தலும் நிருவாகமும் - மாநிலச் செலவினங்கள் – AC – வேளாண்மை விளை பொருள் விற்பனை இயக்ககம் – 359 பரிசுகளும் வெகுமதிகளும் -01 பரிசுகளும் வெகுமதிகளும்.
[IFHRMS த.தொ.கு. 2401 00 001 AC 35901] - ரூ. 2.00 லட்சம்

8. மேற்காணும் நிகழ்வில், சிறப்பாக செயல்படும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், இப்போட்டியில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்படும் தொகை ரூ.100/- ஆகும். இத்தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின்கீழ் வரவு வைக்கப்பட வேண்டும்:-

0401 – 00 பயிர் வளர்ப்பு – 800 ஏனைய வரவுகள் – AJ பயிர் விளைச்சல் போட்டி – 237 விற்பனை வரவுகள் – 01 விவசாயம்
[IFHRMS த.தொ.கு. 0401 00 800 AJ 23701]

9. மேலும், இயக்குநர், வேளாண்மைத்துறை, இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள்துறை மற்றும் தலைமைச் செயல் அலுவலர், வேளாண் விற்பனை வாரியம் / இயக்குநர், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆகிய துறைத் தலைவர்கள் சிறப்பாகச் செயல்படும் விவசாயிகளின் தேர்வு முறையினை நியாயமான முறையில் நடத்தப்படுவதை உறுதி செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

10. இப்போட்டிகளில் விதிகளை மீறி, சட்ட விரோதமான முறைகளில் பரிசுகளை வெல்ல முயற்சிக்கும் போட்டிகள்/போட்டியாளர்களை நிராகரிக்கும் உரிமையை மாநில குழு தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

11. மேலும், இந்நேர்வில், தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியமானது, மாநிலத்தில் ஏற்றுமதி தொடர்பான செயல்படுகளுக்கான முகமையாக செயல்படும் காரணத்தால் மற்ற திட்டங்களில் நடைமுறையில் உள்ளது போல் வேளாண்மை விற்பனை மற்றும் வணிக துறை, இயக்குநர் அவர்கள் இத்தொகையை தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியத்தின் வட்டி இல்லாத

பதவி பெயர் வைப்பு கணக்கில் (Non Interest bearing PD Account) பற்று வைத்திடவும், திட்டம் செயல்படுத்துவதற்கு தேவைப்படும் போது அதை பயன்படுத்தவும் தலைமைச் செயல் அலுவலர், வேளாண் விற்பனை வாரியம் அவர்களுக்கு அரசு அனுமதி வழங்குகிறது.

12. இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறையினை தவறாமல் கடைபிடிக்குமாறு இயக்குநர், வேளாண்மைத்துறை, இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள்துறை மற்றும் மற்றும் தலைமைச் செயல் அலுவலர், வேளாண் விற்பனை வாரியம் / இயக்குநர், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆகியோர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

13. மேலே பத்தி-6-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.6.00.000/- 2022-2023 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய ஒதுக்கீட்டை எதிர்நோக்கி, மேலே பத்தி-6இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள இயக்குநர், வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மற்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத்துறை ஆகியோருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், 2022-2023-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவினை அனுப்பும்போது மேற்காணும் செலவினத்தையும் தவறாமல் சேர்த்து நிதித் (வேளாண்மை)த் துறைக்கு அனுப்புமாறு இயக்குநர், வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மற்றும் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத் துறை ஆகியோருக்கு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

14. இவ்வரசாணை, நிதித்துறையின் அ.சா.கு. எண். 40706/2022 நிதி (வேளாண்மை உழவர் நலத்) துறை, நாள்:24.08.2022-ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப்பேரேட்டு எண் 1030(ஆயிரத்து முப்பது), (IFHRMS ASL No.2022081030)

(ஆளுநரின் ஆணைப்படி)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்:
வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
தோட்டக்கலை மற்றும் தோட்டப் பயிர்கள் இயக்குநர், சென்னை-5.
தலைமைச் செயல் அதிகாரி, தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் / வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் சென்னை-32.

தலைமைப் பொறியாளர், ( வேளாண்மை பொறியியல் ) சென்னை-35.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்-13.
தலைவர், வெளிநாட்டு வர்த்தக இயக்குநர் ஜெனரல் (டிஜிஎஃப்டி) உத்யோக் பவன், எச்-விங், கேட் எண். 2, மௌலானா ஆசாத், சாலை, புது தில்லி -110011.
தலைவர், தென்னை வளர்ச்சி வாரியம், எண். 47, F1, டாக்டர் ராமசாமி சாலை, கே.கே. நகர், சென்னை - 600 078, தமிழ்நாடு.
தலைவர், நறுமணப் பொருட்கள் வாரியம், சுகந்தா பவன் என்.எச்.பை பாஸ், பாலரிவட்டம்.P.O, கொச்சி – 682025.
தலைவர், காபி வாரியம், 1, டாக்டர். பி.ஆர்.அம்பேத்கர் வீதி, பெங்களூரு - 560 001,
தலைவர், தேயிலை வாரியம், 14, பி.டி.எம். சரணி (பிரபோர்ன் சாலை) கொல்கத்தா 700 001.
தலைவர், முந்திரி மற்றும் கோகோ வளர்ச்சி இயக்குநரகம், 8வது மற்றும் 9வது தளம், கேரா பவன் எஸ்ஆர்வி பள்ளி சாலை, கொச்சி, கேரளா-682011.
மாநில பொதுக் கணக்காயர் (A&E), சென்னை – 18.
மாநில பொதுக் கணக்காயர் (Audit-1), சென்னை – 18.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
மாநில பொதுக் கணக்காயர் (G&SSA), சென்னை – 35.
மாநில முதன்மைக் கணக்காயர் (E&RSA), சென்னை – 18.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர், சென்னை-18/(பெயரில்).
உறைவிட தணிக்கை அலுவலர், மாநில முதன்மை கணக்காயர் அலுவலகம் (சமூகத் தணிக்கைப் பிரிவு), சென்னை-9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள். (சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர)

**நகல்:**

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர், சென்னை-9.
நிதி (வேளாண்மை / வரவு செலவு பொது I (ம) II ) துறை, சென்னை-9.
வேளாண்மை – உழவர் நலத் (பொது/வ&தி) துறை, சென்னை-9.
வேளாண்மை – உழவர் நலத் (அநமு3) துறை, சென்னை-9. (2 நகல்கள்) (அட்டவணைப்படுத்தும் வகைக்கு).
உதவி நிரலர், வேளாண்மை - உழவர் நலத் துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

## இணைப்பு-I

அரசாணை (நிலை) எண். 191, வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.4) துறை

நாள்: 24.08.2022

**புதிய உள்ளூர் வேளாண் தொழில்நுட்பங்கள் மற்றும் இயந்திரங்களின், கண்டுபிடிப்பு இயற்கை முறையில் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கான விருது வேளாண் ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் ஏற்றுமதியாளர்களை அங்கீகரிப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்**

அ. நான்கு விருதுகளின் பெயர்கள்:

i. புதிய உள்ளூர் வேளாண் தொழில்நுட்பங்கள் கண்டுபிடிப்பு விவசாயி மற்றும் விவசாய வேளாண் சாதனங்களின் கண்டுபிடிப்பு

ii. இயற்கை முறையில் தோட்டக்கலை பயிர் சாகுபடி வேளாண்மையில் சிறந்த செய்யும் விவசாயிகளுக்கு மாநில அளவிலான விருது

ஆ. நோக்கங்கள்:

இத்திட்டத்தின் நோக்கம், உள்ளூர் புதிய தொழில்நுட்பம் மற்றும் உள்ளூர் வேளாண் இயந்திரங்களை கண்டுபிடிக்கும் விவசாயிகளை ஊக்குவிப்பதும், இயற்கை முறையில் பயிரினை தோட்டக்கலை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவித்தல் விவசாயிகளை பாராட்டி, வேளாண் ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிகளை ஊக்குவிப்பதும் ஆகும்.

இ. திட்டத்தை செயல்படுத்துதல்

இத்திட்டத்தின் மூலம் சிறந்த விவசாயிகளை அங்கீகரிப்பதற்காக ரூ.6 லட்சம் (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) நிதிச் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது:

| வ. எண் | வகைகள் | பரிசு தொகை (ரூ.இலட்சத்தில்) | சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் |
|---|---|---|---|
| 1. | i. புதிய உள்ளூர் வேளாண் தொழில் நுட்பங்கள் கண்டுபிடிப்புகள் மற்றும்<br>ii. வேளாண் சாதனங்களின் கண்டுபிடிப்புகள் | 1.00<br>1.00 | வேளாண்மை இயக்குநர் |
| 2. | இயற்கை விவசாயத்தில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு<br>முதல் பரிசு<br>இரண்டாம் பரிசு<br>மூன்றாம் பரிசு | <br>1.00<br>0.60<br>0.40 | இயக்குநர் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, |
| 3. | வேளாண் ஏற்றுமதியில் சிறந்த விளங்கும் விவசாயிக்கு | 2.00 | தலைமைச் செயல் அதிகாரி, தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியம் |
| | மொத்தம் | 6.00 | |

ஈ. விவசாயி பங்கேற்பாளர்கள் சமர்ப்பிக்க வேண்டிய தேவையான தகவல்கள்

- அனைத்து மாவட்ட விவசாயிகளும் கலந்துகொள்ளலாம்.
- விண்ணப்பதாரர் தனது பெயரை உழவன் செயலி மூலம் (வேளாண்மை இயக்குநரகத்தின் தொழில் நுட்ப பிரிவு மூலம் தனி செயலாக்கம் மேற்கொள்ளப் பட வேண்டும்)
- பங்கேற்கும் விவசாயிகளுக்கு வயது வரம்பு ஏதும் இல்லை.
- பதிவு செய்ய வேண்டும். மேலும் இணைப்பின்படி முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை வழங்க வேண்டும்.
- நான்கு பிரிவுகளில் விவசாயி விருதுக்கான, பங்கேற்பு பதிவுக் கட்டணம் ரூ.100/-.
- பங்கேற்பிற்காக, குறிப்பிட்ட படிவத்தில் (இணைப்பு II) விவரங்கள் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர் (வே.பொ.) உரிய கட்டணத்துடன் பயிர் விளைச்சல் போட்டிக்கு வேளாண்மை விரிவாக்க மையத்தில் விண்ணப்பிப்பது போல் சமர்ப்பிக்க வேண்டும். பங்கேற்பாளர்களுக்கு உரிய ஒப்புகை வழங்கப்பட வேண்டும்.
- போட்டியில் கலந்து கொள்ளும் விவிசாயியின் கண்டுபிடிப்பானது அவரது சொந்தக் கண்டுபிடிப்பாக இருக்க வேண்டும்.

உ. தகுதி வரம்பு

i. பங்கேற்பாளர்கள் அனைவரும் விவசாயிகளாக இருக்க வேண்டும் (சொந்தமாக / குத்தகைக்கு) மற்றும் விவசாயத்தில் தீவிரமாக ஈடுபடுத்த வேண்டும்.

ii. உள்ளூர் புதிய தொழில்நுட்பம் மற்றும் வேளாண்மைக் கருவிகளின் கண்டுபிடிப்பு, சிறந்த செயல்திறன் வேளாண் ஏற்றுமதியாளர் மற்றும் பாரம்பரிய இயற்கை வேளாண்மைக்கான சிறந்த விவசாயி விருது ஆகியவற்றில் பதிவு செய்த விவசாயிகள், அடுத்த நிதியாண்டுகளில் ஒரே மாதிரியான கண்டுபிடிப்புகள் அல்லது வகைகளில் பங்கேற்கக்கூடாது. ஈடுபடுத்தக்கூடாது தொழில்நுட்பம்/உபகரணங்களில் ஏதேனும் முன்னேற்றம் / மாற்றம் அனுமதிக்கப்படலாம்.

<u>போட்டி நடத்துதல்</u>: விண்ணப்பங்கள் பெறப்பட்டதும், மாவட்டக் குழு விண்ணப்பங்களை ஆய்வு செய்து, போட்டியை நடத்துவதற்கு மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெற வேண்டும்.

- வேளாண் இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் மற்றும் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் / முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியம் ஒவ்வொரு வகையிலும் விவசாயிகளுக்கான சிறந்த செயல்திறனை மதிப்பிடுவதற்கு போதுமான அளவுருக்களை நிர்ணயிக்கலாம். இது குறித்து உதவி தேவைப்பட்டால், உதவி வேளாண் அலுவலர்/ உதவி தோட்டக்கலை அலுவலர் /அல்லது வேளாண் அலுவலர்

/தோட்டக்கலை அலுவலர் பங்கேற்பாளர்களை முன்னிலைப் படுத்துவதற்கு உதவலாம்.

- பங்கேற்பாளர் தனது சாதனையை சரியான விளக்கத்துடனும் நியாயத்துடனும் மாவட்ட அளவிலான குழுவிடம், ஆர்ப்பாட்டங்கள், இயந்திரங்கள், புகைப்படம் அல்லது வீடியோ அல்லது பவர் பாயின்ட் ஆகியவற்றுடன் விளக்க வேண்டும். ஏதேனும் உதவி தேவைப்பட்டால், சம்பந்தப்பட்ட உதவி வேளாண்மை அலுவலர் (AAO) / உதவி தோட்டக்கலை அலுவலர் (AHO) அல்லது வேளாண் அலுவலர் (AO) / தோட்டக்கலை அலுவலர் (HO) இந்த விளக்கக்காட்சியை வழங்க பங்கேற்பாளர்களுக்கு தனது ஆதரவை வழங்க வேண்டும்.
- மாவட்டக் குழு விவசாயிகளின் செயல்திறனை மதிப்பீடு செய்வதற்கு முன் கவனமாக ஆய்வு செய்ய வேண்டும். தேவைப்பட்டால், மாவட்டக் குழு வயல்/விவசாயிகள் இல்லத்திற்குச் சென்று சரிபார்த்துக் கொள்ளலாம்.
- சம்பந்தப்பட்ட துறைத் தலைவர் அளித்த அளவுகோல்களின் அடிப்படையில், மாவட்டக் குழு செயல்திறனை மதிப்பீடு செய்து, சம்பந்தப்பட்ட ஒவ்வொரு வகையிலும் சிறப்பாகச் செயல்படும் விவசாயிகளை மாநிலக் குழுவுக்கு, அதன் கருத்துக்களுடன் பரிந்துரைக்க வேண்டும்.
- தோட்டக்கலை மற்றும் தோட்டப் பயிர்கள் இயக்குநர் மற்றும் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் / முதன்மை செயல் அலுவலர் தமிழ்நாடு வேளாண்மை விற்பனைக் குழுமத்தின் தலைமையிலான மாநில அளவிலான குழு மாவட்டக் குழுவின் அறிக்கையை ஆய்வு செய்து அந்தந்தப் பிரிவுக்கான பரிசு வென்றவர்களை அறிவிக்க வேண்டும்.
- விதிகளை மீறி, சட்டவிரோதமான முறையில் பரிசுகளை வெல்ல முயற்சிக்கும் போட்டிகள்/போட்டியாளர்களை நிராகரிக்க மாநிலக் குழுவுக்கு உரிமை உண்டு.

ஊ. பரிசுகள் தொடர்பான ஏதேனும் சர்ச்சையில் வேளாண்மை இயக்குநர், தோட்டக்கலை மற்றும் தோட்டப் பயிர்கள் இயக்குநர் மற்றும் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்குநர் / தமிழ்நாடு வேளாண்மை சந்தைப்படுத்தல் வாரியத்தின் முதன்மை செயல் அலுவலர் ஆகியோர் அடங்கிய மாநில அளவிலான குழுவுக்கு இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் உண்டு.

எ. <u>விரிவாக விளம்பரப்படுத்துதல் :-</u>

மாநில அரசின் நோக்கத்தை பிரபலப்படுத்தவும், நான்கு பிரிவுகளிலும் சிறந்த செயல்திறன் விருதுக்கு அதிக பங்கேற்பாளர்களை அழைக்கவும் உள்ளூர் செய்தித்தாள்களில் பரவலான விளம்பரம் வழங்கப்பட வேண்டும். நான்கு பிரிவுகளிலும் சிறந்த செயல்திறன் விருதுக்கு அதிகமான பங்கேற்பாளர்களை அழைக்கப்பட வேண்டும்.

<u>ஏ. பரிசுத் தொகை:</u>

மாவட்ட மற்றும் மாநில அளவிலான குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் புதுமையான தொழில்நுட்பம் மற்றும் வேளாண்மைக் கருவிகள், வேளாண் ஏற்றுமதி மற்றும் இயற்கை வேளாண்மைக்கான பரிசுத்தொகை டிமாண்ட் டிராப்ட் மூலம் வெற்றி பெறும் விவசாயிக்கு வழங்கப்பட வேண்டும்.

பரிசுத் தொகை மக்கள் பிரதிநிதிகளால் விநியோகிக்கப்பட வேண்டும்.

ஐ. இந்த விருதுகளைப் பெறுபவர்கள் பற்றி மேற்கொள்ளப்படும் விரிவான விளம்பரம், மற்ற விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் அமைய வேண்டும்.

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

## இணைப்பு -2

## விண்ணப்பப் படிவம்

உள்ளூர் புதுமையான வேளாண் தொழில்நுட்பம் / உள்ளூர் விவசாய இயந்திரங்கள் கண்டுபிடிப்பு/இயற்கை முறையில் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மாநில அளவிலான விருது/ வேளாண் ஏற்றுமதியில் சிறப்பாகச் செயல்படும் விவசாயிக்கான விருது - 2022-23

| | | |
|---|---|---|
| 1. அ) விண்ணப்பதாரரின் பெயர்<br>ஆ) விண்ணப்பதாரரின் ஆதார் எண் | | |
| 2. தந்தை பெயர் | | |
| 3. முகவரி | | |
| 4. பங்கேற்கும் பரிசு இனம்<br>அ) உள்ளூர் புதுமையான வேளாண் தொழில்நுட்பம் மற்றும் உள்ளூர் விவசாய இயந்திரங்களின் கண்டுபிடிப்பு<br>i. கண்டுபிடிப்பின் வகை<br>ii. தொழில் நுட்பத்தின் /கருவியின் பெயர்<br>iii. தொழில் நுட்பத்தின் /கருவியின் விபரங்கள் புகைப்பட மற்றும் காணொளிகளுடன்<br>iv. விவசாய மேம்பாட்டில் கண்டுபிடிப்பின் பங்கு<br>v. புதிய கண்டுபிடிப்பை ஏற்றுக்கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை | | |
| ஆ) இயற்கை விவசாயம் (தோட்டக்கலை பயிர்):-<br>i. பயிரின் பெயர்<br>ii. இயற்கை விவசாயத்தில் விவசாயியின் அனுபவம்<br>iii. இயற்கை விவசாயத்திற்கு பயன்படுத்திய ஈடுபொருட்கள்<br>iv. இதன்மூலம் கூடுதல் வருமானம் ஈட்டியது<br>v. ஒரு ஏக்கருக்கு உற்பத்தி செய்யப்பட்ட அளவு<br>vi. அவரால் பயிற்சி அளிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | | |
| இ) வேளாண் ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயி:-<br>i. ஏற்றுமதி செய்யப்பட்ட விளை பொருளின் பெயர்<br>ii. ஏற்றுமதி செய்யப்பட்ட விளைபொருளின் அளவு<br>iii. ஏற்றுமதி செய்யப்பட்ட நாடுகள்<br>iv. பயிர் விளைவிக்க மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள்<br>v. கூடுதல் வருமானம் ஈட்டப்பட்ட வருமான விவரம் | | |

5. பதிவுக் கட்டணம் செலுத்தியதற்கான இரசீது எண் மற்றும் தேதி

**சான்று**

6. உள்ளூர் புதுமையான வேளாண் தொழில்நுட்பம் / உள்ளூர் விவசாய இயந்திரங்கள் கண்டுபிடிப்பு/ இயற்கை முறையில் தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மாநில அளவிலான விருது/ வேளாண் ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் விவசாயிகளைத் தேர்ந்தெடுக்கும் போட்டியின் விதிமுறைகளை படித்து அறிந்து கொண்டேன்.

மேற்காணும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவேன் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விண்ணப்பதாரரின் கையொப்பம்

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்